கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**அசல் வழக்கு எண்.218/2014**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 10.12.2024 நாளாகிய இன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC), திருமதி.S.Suganiya Sri, B.A.B.L.,(Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 10.12.2024 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | பகீரவதி | வயது.. | 49 |
| கணவர் பெயர்.. | கணேசன் (எ) கணேசமூர்த்தி | கிராமம்.. | மீதிகுடி |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை..**

**1.** என் மாமனார், மாமியார் பெயர் என்னவென்றால் ரத்தினசபாபதி மாமனார், சற்குணம் (எ) சரஸ்வதி எனது மாமமியார். எனது மாமனார் 16.12.2016 அன்று இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது மாமனார் மாமியாருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 2 மகன்கள், 2 மகள்கள். மகன்களின் பெயர் என்னவென்றால் என் கணவர் கணேசன், அவரது சகோதரர் பாலசுப்பிரமணியன், மகள்கள் பெயர் என்னவென்றால் மூத்தவர் தையல்நாயகி, இளையவர் லதா. தையல்நாயகி இளங்கோ என்பவரை திருமணம் முடித்து எங்கு வசித்து வருகிறார் என்றால் மீதிகுடியிலே வசித்து வருகிறார். லதா பாலசுப்பிரமணியன் என்பவரை திருமணம் முடித்து சேத்தியாதோப்பில் வசிக்கிறார்.

2. தையல்நாயகி எனது குடும்பத்தோடு சேர்ந்து வசித்து வந்தாரா என்றால் ரத்தினசபாபதி உயிரோடு இருக்கும் வரை எங்களோடு தான் ஒரேகுடும்பமாக வசித்து வந்தார் ரத்தினசபாபதி இறந்தபிறகு குடும்ப சொத்தில் ஒரு பாகத்தில் வீடு கட்டி தனியே வசித்து வருகிறாரா என்றால் சரிதான். எனக்கு மீனா என்று ஒரு மகளும், முத்துக்குமரன் என்ற மகனும் உள்ளனர். மீனாவிற்கு திருமணம் ஆகி அவரது கணவருடன் தர்மபுரியில் வசிக்கிறாரா என்றால் சரிதான். பாலசுப்பிரமணியன் மனைவி சுந்தரி என்றால் சரிதான். அவர்களுக்கு ஆனந்தராஜ், வினோத்ராஜ் என்ற இரு மகன்கள் உள்ளனர் என்றால் சரிதான். சுந்தரி அவர்களின் குழந்தைகளோடு என்னோடு சேர்ந்து வசித்து வருகிறார்களா என்றால் இல்லை, சுந்தரியின் தகப்பனார்

வீட்டில் வசித்து வருகிறார். எவ்வளவு ஆண்டுகளாக அவரது தகப்பனார் வீட்டில் வசிக்கிறார் என்றால் திருமணம் ஆகி ஒரு வருடம் என் நாத்தனார் வீட்டில் ஒன்றாக வசித்து வந்தார் அதன் பிறகு அவரது தகப்பனார் வீட்டில் வசிக்கிறார். தையல்நாயகியின் கணவருக்கு இளநாங்கூர் என்ற கிராமத்தில் வசித்து வந்தார். தையல்நாயகியின் குழந்தைகள் தையல்நாயகியோடு வளர்ந்தார்களா என்றால் தையல்நாயகியோடும், தாத்தா ரத்தினசபாபதியோடும் வளர்ந்து வருகிறார்கள். தையல்நாயகியும் அவரது கணவரும் எத்தனை ஆண்டுகளாக பிரிந்து வாழ்கிறார்கள் என்றால் சுமார் 20 வருடங்களாக பிரிந்து வாழ்கிறார்கள்.

**சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

*Sd/-S.Suganiya Sri,*
Additional District Munsif(FAC),
Chidambaram.